1973 மார்ச் 20]

இருக்கிறார்கள். சுற்று வட்டாரத்தில்கூட ஐந்து மைல் சுற்றளவில் வடமதுரை, பொன்னபுரம், செம்மேடு கிராமங்களில் மூன்று நடு நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இவைகளை எண்ணிப் பார்க்கும் போது நலத்துறை மூலமாக அங்கு பள்ளி தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

பெரியபுலியூர் அரிசனக் குடியிருப்பு

* 438 வின.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி துணை வட்டம், பெரியபுலியூர் அரிசன காலனி மக்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டம் மேலும் கால தாமதப்படுவதன் காரணம் என்ன?

(இ) இது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) பிரிவு 6 விளம்பல் அரசால் ஏற்கப்பட்டு 13—10—1971-ம் தேதியில் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. அரிசன நலத் தாசில்தாரால் அனுப்பப்பட்டுள்ள நில விலை மதிப்பீட்டு அறிக்கை செங்கை மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் பரிசிலனையில் உள்ளது.

(இ) அரசால் நிதி ஒதுக்கீடு செய்தவுடன் அவார்டு பாஸ் செய்து விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : நிதி ஒதுக்கீடுகள் விரைவாகச் செய்து 1973-க்குள்ளாக, இறுதியிலாவது மனைப் பட்டாக்கள் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவார்டு பாஸ் செய்து விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

கோணப்பராயன்குளம் கிராமத்துக்கு சாலை வசதி

* 439 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், கோணப்பராயன்குளம் கிராம தாழ்த்தப்பட்ட மக்கள் சுடுகாட்டுப் பாதை இல்லாது சிரமப் படுகிறார்கள் என்பது உண்மையா?